செ.வெ.எண். 430/2017 நாள்: 22.09.2017

## பத்திரிக்கை செய்தி

## அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் திருவண்ணாமலை.

தமிழ் நாட்டில் உள்ள மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிக்காட்டவும், தொழிற்சாலைகளும், கல்வி நிறுவனங்களும் நவீன தொழிற்சாலைகளும், நவீன தொழில் நுட்பம் சார்ந்த எண்ணங்களையும் புதிய கண்டுபிடிப்புகளையும் உருவாக்க ஒரு களத்தினை ஏற்படுத்தவும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மூலம் மாநில அளவிலான திறனாய்வு போட்டிகள் நடத்தப்பட உள்ளது.

இதன் முதற்கட்டமாக மாவட்ட அளவில் இத்திறனாய்வு போட்டிகள் நடத்தப்பட்டு அதில் முதலாவதாக தேர்ந்தெடுக்கப்படும் படைப்புக்கு மாநில அளவில் கலந்துகொள்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவாரால் பரிந்துரைக்கப்படும்.

இதன் அடிப்படையில் திருவண்ணாமலை மாவட்டத்தில் வரும் அக்டோபர் 10ம் தேதி காலை 10 மணியளவிள் திருவண்ணாமலை அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் வேங்கிக்காலில் போட்டித் தேர்வுகள் நடைபெற உள்ளது. இப்போட்டித் தேர்வில் கலந்துகொள்ள விருப்பம் உள்ளவர்கள் www. Skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம். இப்போட்டிகள் இயந்திரவியல், மின்னியல், மின்னனுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய 3 துறைகளில் நடத்தப்பட உள்ளது. விண்ணப்பம் 8.10.2017 மாலை 5.00 மணிக்குள் விண்ணபிக்க வேண்டும்.

பொறியியல் கல்லூரிகள், பல்தொழில்நுட்ப கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் பயின்று தேர்ச்சி பெற்றவாகள், தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநர்களாக பயிற்சி பெறுவோர் மற்றும் குறுகியகால பயிற்சிகள் மூலம் திறன் பெற்றோர், தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் மற்றும் அமைப்பு சாரா தொழில்களில் பணி அனுபவம் பெற்ற திறனுடையோர் தகுதி பெற்றவர்களாவர்.

இப்போட்டிகளில் இடம் பெறுவோர்க்கு பரிசும், சான்றிதழும் வழங்கபடபடும். மேலும் இவர்கள் மாநில அளவில் வர்த்தக மையம், நந்தம்பாக்கம், சென்னையில் நடைபெறும் மாநில அளவிலான திறனாய்வு போட்டிகளில் கலந்து கொள்ள தகுதி உடையவர். இப்போட்டிகளை பார்வையிட தமிழகத்தில் உள்ள பெரிய தொழிற் நிறுவனங்கள் மற்றும் தொழில் அதிபர்கள் வருகை தர உள்ளனர்.

எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள மாணவர்கள், தொழிற்சாலை பணியாளர்கள், தொழில்பழகுனர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இப்போட்டிகளில் கலந்து கொண்டு தங்களது திறமைகளையும், திறனையும் வெளிப்படுத்துவதன் மூலம் நல்ல வேலைவாய்ப்பினை பெறலாம் என்பதால் இப்போட்டிகளில் அனைவரும் பங்கேற்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.எஸ்.கந்தசாமி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மாவட்ட ஆட்சியரகம், திருவண்ணாமலை.**